தென்னீர்வயல் ஊராட்சி மன்றத்தலைவரின் செயல்முறைகள்
முன்னிலை-G.சீதாலெட்சுமி

ந.க.எண் 4 நாள்: 16.10.2023

பொருள்:— மனைப்பிரிவு திட்டம் 2023 சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம், தென்னீர்வயல் ஊராட்சி காஞ்சிர வயல் கிராமம் சர்வே எண் 12/6-ல் 3700.0 ச.மீ (0.92 ஏக்கர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி — இசைவு — ஒப்புதல் வழங்குதல் குறித்து.

பார்வை:— 1. நகர ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள்: இணைய தள எண் SWP-ROLDJ0D0-2023

2. அரசாணை நிலை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை ந.வ4(3) நாள் : 04.05.2017

3. மனுதாரர் S.செந்தில்நாதன் த/பெ சுப்பிரமணியன் காரைக்குடி அவர்களின் கடிதம் நாள் 04.10.2023

4. தென்னீர்வயல் ஊராட்சி மன்ற தீர்மான எண் 62 நாள் 05.10.2023

5. மனுதாரர் நில உபயோகமாற்ற கட்டணம் செலுத்திய சலான் எண் 010054 நாள்: 16.10.2023

உத்தரவு:

தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம், தென்னீர்வயல் கிராம ஊராட்சி, காஞ்சிரவயல் கிராமம் நில அளவை எண் 12/6-ல் 3700.0 ச.மீ (0.92 ஏக்கர்)ல் மொத்த பரப்பளவில் கோரப்பட்ட மொத்த மனைகளின் எண்ணிக்கை 16 ஒதுக்கபட்டுள்ள மனைகளின் எண்ணிக்கை 1 முதல் 16 பார்வை 1ல் கண்டுள்ள நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படியும் மனைபிரிவிற்கு கோரப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியும் மேலும் நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் அவர்களின் உத்தரவுப்படி உள்ளாட்சி உபயோகம் ஒதுக்கப்பட்ட இடத்தினை மனுதாரர் தலைவர் தென்னீர்வயல் ஊராட்சி 04.10.2023 அன்று இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்தும், பார்வை 2ல் கண்ட அரசாணையின்படி மனுதாரர் கூராய்வுக் கட்டணம் மற்றும் மனைப் பிரிவு அனுமதி கட்டணம் ரூ 14,800/— (ரூபாய் பதிநான்கு ஆயிரத்தி என்னூறு மட்டும்) உரிய அரசு தலைப்பிலும், செலுத்தியதைத் தொடர்ந்து இணைப்பில் கண்ட நிபந்தனைகளின்படியும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கடிதம் இணைய தள எண் SWP-ROLDJ0D0-2023 நாள் 21.07.2023 இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் மேற் கண்ட சர்வே எண்களுக்குட்பட்ட மனையிடங்களை விற்பனை செய்வதற்கு உத்தரவிடப்படுகிறது.

மேலும் மேற்கண்ட இடங்களை பத்திரபதிவு செய்வதற்கு ஊராட்சிக்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:—

1) மனைப்பிரிவின் ஊடே உயர் அழுத்த மின் கோபுரபாதை செல்லுமாயின் அம்மனை வரன்முறை படுத்த இயலாது.
2) மனைப்பிரிவின் மீது நீதி மன்ற வழக்கோ, பிச்சனைகள் ஏதும் இருப்பது கண்டறியப்பட்டால் உத்தரவு ரத்து செய்யப்படும்.
3) மனையின் ஊடாக குறைந்த அழுத்த மின்கம்பி பாதை செல்லுமாயின் அதன் போக்கை சாலை போக்கில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.
4) மனையின் ஊடாக போக்கு கால்வாய் செல்லுமாயின் அதற்கு இடையூரின்றி அமைக்கப்பட வேண்டும்.
5) மனைப்பிரிவின் அருகில் நீர் நிலைகள் அமையுமாயின் கட்டிடங்களில் இருந்து வெளிவரும் கழிவு நீர்கள் நீர் நிலைகளில் கலக்காத வண்ணம் உறுதி செய்யப்பட வேண்டும்.
6) இந்த மனைப்பிரிவுக்கு அரசு விதிமுறைகளுக்குட்பட்டு ஏதும் குறைகள் கண்டறியப்பட்டால் இந்த உத்தரவினை ரத்து செய்ய எந்த காலகட்டத்திலும் ஊராட்சி மன்றத் தலைவருக்கு முழு அதிகாரம் உண்டு.

G. Seethalakshmi 18/10/23

தலைவர்
தென்னீர்வயல் ஊராட்சி

இணைப்பு:— வரைபடம்
திரு S.செந்தில்நாதன் த/பெ சுப்பிரமணியன்
காரைக்குடி.

நகல்:—

1) சார்பதிவாளர், பத்திர பதிவுத்துறை, தேவகோட்டை
2) துணை இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, சிவகங்கை
3) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ) தேவகோட்டை.